# புதிய ஜவுளிக் கூப்பன் மார்ச் முதல் திகதி


Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49

மலர் 9

இதழ் 1

போன் : 389

National Tamil Daily

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பராபவ மாசி 8 ஜுலகஃ 9 திங்கட்கிழமை (20-2-67


## அமுலுக்குவரும்

கொழும்பு, ஞாயிறு

தற்பொழுது அமுலில் இருக்கும் 103, 104வது ஜவுளிக்கூப்பன் புள்ளிகள் மார்ச் மாதத்துக்குப் பின்னர் செல்லுபடியாகாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

22வது இலக்க தொடர்ச்சிப் பங்கீட்டரிசிப் புத்தகத்தின் கூப்பன் புள்ளிகளான இவை இரண்டுக்கும் பதிலாகத் தற்பொழுது உபயோகத்திலிருக்கும் 23வது இலக்கத் தொடர்ச்சிப் பங்கீட்டரிசிப் புத்தகத்தின் 105, 109வது கூப்பன் புள்ளிகள் மார்ச்மாதம் முதலாந்தேதியிலிருந்து அமுலுக்குக் கொண்டுவரப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜவுளி அடையாள அட்டைகளைப் பொறுத்தமட்டில் 7, 8வது இலக்கப் புள்ளிகள் மார்ச் மாதத்துடன் முடிவுக்குவருகிறது. மார்ச் மாதம் முதலாந்தேதியுடன் 10, 11வது இலக்கப் புள்ளிகள் அமுலுக்குவரும்.

# பல்கலைக்கழக படிப்புக்கு 1971-ல் ஆங்கிலம் கட்டாயம்

## தேசிய கல்விச்சபை சிபார்சு

கொழும்பு, ஞாயிறு

**இலங்கையிலுள்ள மூன்று பல்கலைக் கழகங்களிலும் சேர்ந்து உயர்தரக் கல்வி பெற விரும்பும் மாணவர்கள் 1971-ம ஆண்டிலிருந்து ஆங்கிலத்தில் கட்டாயம சித்திபெற வேண்டும.**

1971-ம் ஆண்டு முதல் பல்கலைக்கழகப் பிரவேசப் பரீட்சைக்கு ஆங்கிலம் கட்டாய பாடமாக இருக்க வேண்டுமென்று உயர்தரக் கல்விக்கான தேசியசபை, கல்வி அமைச்சுக்குச் சிபார்சு செய்திருக்கிறது.

1971-ம் ஆண்டிலிருந்து கல்விப் பொதுத் தராதரப் பத்திர [சாதாரணம்] பரீட்சைக்கு ஆங்கிலம் கட்டாய பாடமாக இருக்க வேண்டுமென்று தேசியக் கல்விச் சபை சிபார்சு செய்திருக்கிறது. ஆங்கிலக் கல்விக்கு நான்கு வருட அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது போதுமென்று சபை அபிப்பிராயப்பட்டது.

கொழும்பில் நான்காவது பல்கலைக்கழகம் அமைக்கும் வேலைகள் இவ்வருடம் ஒக்டோபர் மாதத்துக்குள் பூர்த்தியடைய வேண்டுமென்றும் இப்பல்கலைக்கழகம் கொழும்பு பல்கலைக்கழகம் என அழைக்கப்படவேண்டுமெனவும் கல்வி அமைச்சுக்கு தேசிய கல்விச்சபை சிபார்சு செய்திருக்கிறது.

## அறுவடையுடன் அரிசிவிலை வீழ்ச்சி?

புன்னாலைக்கட்டுவன், ஞாயிறு

நாடெங்கும் நடைபெற்றுவரும் நெல் அறுவடையைத் தொடர்ந்து அரிசி விலை குறைந்துவருவதாகத் தெரிகிறது. புன்னாலைக்கட்டுவனில் உள்ள சில அரிசிஆலைகளில் நாட்டரிசி கொத்து 95 சதமாக விற்கப்படுகின்றது. கிளிநொச்சிப்பகுதியில் நெல் புசலொன்று 12 ரூபா 50 சதமாக விற்கப்படுகிறதென்றும் இன்னும் சில தினங்களில் அரசாங்க உத்தரவாத விலைக்கு விற்கப்படுமென்றும் அறியப்படுகிறது.

புன்னாலைக்கட்டுவனிலிருந்து யாழ்ப்பாண நகரத்திலுள்ள கடைகளுக்கு நெல் மூடைகள் விற்கப்படுகின்றன. தொடர்ந்து சாதகமான நிலைமை நிலவுமாயின் அரிசி விலை மேலும் குறைய இடமுண்டென்று புன்னாலைக்கட்டுவன் அரிசி ஆலை முதலாளிமார் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

## யாழ். துறைமுக தொழிலாளருக்கு ஒரு நல்ல செய்தி

பலாலி, ஞாயிறு

வடபகுதியிலுள்ள 600 துறைமுகத் தொழிலாளர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்த கப்பல் யாழ்ப்பாணம் வரவிருக்கிறது.

'யூனிவேஸல் றேடர்' என்னும் கப்பல் இம்மாதம் 19ந் தேதி யாழ்ப்பாணம் வந்துசேருமென அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் எம். பி.யும், யாழ்ப்பாண அரசாங்க அதிபரும் எடுத்துக்கொண்ட முயற்சியால் இக்கப்பல் இங்கு வரவிருப்பதாக அறியப்படுகிறது. இக்கப்பல் சுமார் 9,000 தொன் அரிசியை ஏற்றிவருவதாகத் தெரியவருகிறது. இக்கப்பலில் சுமார் 15 நாட்களுக்குத் துறைமுகத் தொழிலாளருக்கு வேலை வாய்ப்பிருக்குமென நம்பப்படுகிறது.

## 39 ஊழியர் தற்காலிக நீக்கம்

### திருமலை துறைமுகத்தில் மீண்டும் சீரற்ற நிலை

திருக்கோணமலை, ஞாயிறு

திருக்கோணமலைத் துறைமுகத்தில் மீண்டும்வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. 39 துறைமுகத் தொழிலாளர் தற்காலிகவேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். 20 தொழிலாளர் ''சுகவீனம்'' காரணமாக வேலைக்குவரவில்லை.

சென்ற 16-ந் திகதி மாலை வத்தைகளில் தேயிலை ஏற்றிக்கொண்டு ''கிளென்கரி'' என்ற கப்பலுக்குச் சென்ற ஊழியர்கள் தேயிலையைப் பாரமெடுக்கவேண்டிய ரலி குமாஸ்தாக்கள் அங்கு இல்லாததைக்கண்டு என்ன செய்வதென்ற நிலையில் இருந்தனராம். ரசீது வாங்கும் உதவியாளர்களிடம் தேயிலைப்பெட்டிகளை பாரம் கொடுக்குமாறு கூறப்பட்ட யோசனையை தொழிலாளர் ஏற்க மறுத்தனராம். கொந்தராத்துக்கம்பனி அதிகாரியின் தவறுதல் காரணமாக வழமையான ரலி குமாஸ்த்தாக்கள் அங்கு அன்று கடமையாற்றவில்லை. இதே சமயம் வேறு உத்தியோகத்தர்களிடம் பொருள்களை வாய் மூலக்கட்டளையின் மீது பொறுப்புக்கொடுக்கத்தொழிலாளர் விரும்பவில்லை. இதனால் அவர்கள் சரக்கை மீண்டும் கரைக்குக் கொண்டு வந்துவிட்டனர்.

இதனால் வத்தையில் வேலைசெய்த 17 ஊழியர்களுக்கும் நிர்வாகம் தற்காலிக வேலைநீக்க அறிவித்தல் கொடுத்துள்ளது. இது தவிர 20 ஊழியர் 'சுகவீனம்' காரணமாக வேலைக்கு வரவில்லை நேற்று வேலைக்கு வந்த 22 ஊழியர்களையும் முழு வத்தைகளிலும் வேலை செய்யும்படி கேட்கப்பட்டதற்கு அவர்கள் மறுத்துவிட்டனர். அவர்களுக்கும் தற்காலிக வேலைநீக்கநோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கண்ணன் மரணம்

## ஐந்து சிறுவர்கள் யாழ்ப்பாணத்தில் விசாரணை செய்யப்படுவர்

### பொலிஸ் இரகசிய விசாரணையில் திருப்பம

யாழ்ப்பாணம், திங்கள்

முல்லைத்தீவில் காணமல்போய் சில தினங்களுக்குப் பின்னர் புதைக்கப்பட்ட நிலையில்கிடந்த கண்ணனின் சடலம் சம்பந்தமாகமேலும் இரகசிய பொலிசார் பல துப்புகளைக்கண்டு பிடித்துள்ளனர்.

கண்ணன் காணமல்போன கடைசித்தினத்தன்று இன்னும் 6பேருடன் தென்னை வளவுஒன்றுக்கு இளநீர் பிடுங்கச் சென்றதாகவும், பின்னர் கண்ணன் திரும்பிவரவில்லை எனவும் பொலிசாருக்கு ஏற்கனவே துப்புக் கிடைத்ததைத் தொடர்ந்து அவர்கள்நடத்தியவிசாரணையின் பின்னர் கண்ணனுடன் கடைசித் தினத்தன்று சென்றஆறுபேரில் ஐவரைப் பொலிசார் கண்டுபிடித்துள்ளனர். இவர்களை பொலிசார் இரகசிய விசாரணைநடத்தியபோது தங்களுடன்வந்த கண்ணன் மீண்டும் வீடு திரும்பியதாக அவர்கள் ஐவரும் தெரிவித்துள்ளார்கள். சம்பந்தப்பட்ட ஐவரும் சுமார் 12 வயது மதிக்கத்தக்க சிறுவர்கள் என பொலிசார் தெரிவித்துள்ளனர். இவர்கள் ஐவரும் மேலும் விசாரணை செய்யப்படுவதற்காக முல்லைத்தீவிலிருந்து இன்று யாழ்ப்பாணம் கொண்டுவரப்படுவார்கள்.

இம்மரணம் சம்பந்தமாக இரகசிய விசாரணையை முல்லைத்தீவில் நடாத்த இன்ஸ்பெக்டர் இராஜேஸ்வரன் தலைமையில் சென்றிருந்த 8 பேரைக்கொண்ட பொலிஸ் இரகசியக்கோஷ்டியும் இவ்வாரத்தில் யாழ்ப்பாணம் திரும்பும் எனத் தெரியவருகின்றது. [ந.நி.]

## ''கிராமசபைகளின் ஒத்துழைப்புத் தேவை''

வவனியா ஞாயிறு

''நாட்டில் உள்ள கிராம முன்னேற்றச் சங்கங்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து உழைத்ததால் நாட்டில் உள்ள உணவுப் பஞ்சத்தை தீர்கமுடியும். இதன் மூலம் நமது நாடு உணவுக்காக வேறு நாட்டை எதிர்பார்க்வேண்டிய நிலையையும் தவிர்க்கலாம். சகல கிராம முன்னேற்றச் சங்கங்களும் தங்கள் கிராமத்தில் உள்ள மேட்டுநிலம், வேளாண்மை நிலம் போன்றவைகளில் விவசாயம் செய்யப்படுவதா என்பதை பார்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு உத்தியோக பூர்வமாக கடன் உதவி எடுத்துத் தருவதற்கு நான் எப்பொழுதும் உதவி செய்

[2ம் பக்கம் பார்க்க]

## அட்டிகலைக்கு புதிய பதவி

கொழும்பு, ஞாயிறு

அண்மையில் சேவையிலிருந்து ஓய்வு பெறவிருக்கும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஜோன் அட்டிகலை பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சில் பொலிஸ் விவகார ஆலோசகராக நியமிக்கப்படலாம்எனத்தெரிய வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

இறைவா! அற்ப ஆசைகளால் சின்னச்சின்னப் பரிசுகளை வேண்டாமல், இடைவிடாது உனது அருள் என்னுள்பாயவும் நித்தியானந்தத்தைப் பெறவேண்டுமென்று கேட்கக்கூடிய நல்ல புத்தியை நீ எனக்குத் தருவாயாக.

ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANAD J Jaffna
Post Box 49 Jaffna,
Telephone: 38'.

யாழ்ப்பாணம் பராபவ ஹூ மாசி மீ 8 (20-2-67)

## ஆலய பிரவேசம்

தீண்டாமைக் கொடுமையை ஒழிப்பதற்கு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா எடுத்த சமரசமுயற்சிகள் தோல்வியடைந்து விட்டன. ஆயினும் அவரது முயற்சி சில உண்மைகளை வெளிக் கொணர்ந்திருக்கிறது. இவை, இவ்விஷயத்தில் தொடர்ந்து முயற்சி செய்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தருவதாக இருக்கின்றன.

சலூன்கள், லோண்டரிகள் முதலியவற்றில் சிறுபான்மைத் தமிழர் தங்கள் அலுவல்களைச் செய்வதற்கு இடையூறு செய்யப்படுமானால் சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்குச் சட்டம் இடம் கொடுக்கிறதென அரசாங்க அதிபர் தெரிவித்திருப்பது இப்பிரச்னையை சட்டரீதியாகத் தீர்ப்பது சுலபமானதென்பதை எடுத்துக் காட்டுகிறது. ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக சிறுபான்மைத் தமிழர் சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்குச் சட்டம் இடம்கொடுக்கவில்லையென்றும் அரசாங்க அதிபர் தெரிவித்திருக்கிறார். ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக 'சத்தியாக்கிரகம்' செய்வதோ பாலாத்கார முயற்சிகள் செய்வதோ வெற்றியளிக்காது என்பதுதான் இதன் அர்த்தம். இதைத்தெளிவுபடுத்தியுள்ள அரசாங்க அதிபர், அவசியமானால் இந்தியாவிலுமிருந்து சமயப் பெரியார்களையும் அழைத்து தொகுதி தொகுதியாக ஆலயப்பிரவேசத்துக்குப் பிரசாரம் செய்வது நல்லதென யோசனையும் தெரிவித்திருக்கிறார்.

ஆலயப்பிரவேசம் உட்பட சமூகக் குறைபாடுகளை நீக்குவதற்கு உறுதி வாய்ந்த சட்டம் அவசியம். ஆனால் சட்டத்தினால் மட்டும் இப்பிரச்னையைத் தீர்த்துவிட முடியாது. மக்களின் மனமாற்றம் மிக மிக அவசியம். இதற்குப் பிரசாரம் பயனளிக்கும். பத்துப்பதினைந்து ஆண்டுகளுக்குமுன்னிருந்ததைவிட இன்று ஜாதிப்பாகுபாடு குறைந்திருப்பதற்கு மக்களின் மனமாற்றமே காரணம் என்பதை மறந்துவிடமுடியாது.

சென்ற மூன்றுமாத காலத்தில் தாம் நடத்திய பேச்சு வார்த்தைகளில் சில கிராமப்பகுதிகளில் ஆலயப் பிரவேசத்துக்கு எழுபது சதவீதம் ஆதரவு இருப்பதைத்தாம்அறிந்து கொண்டதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்திருக்கிறார். ஆலய தர்மகர்த்தாக்கள் சிலர் அப்பகுதி மக்களுக்கு அஞ்சியும் சில இடங்களில் மக்கள் விரும்பினாலும் மக்களைச்சாட்டிதர்மகர்த்தாக்கள் மறுத்தும் வருகின்றனர். ஆலய தர்மகர்த்தாக்களுடனும் சைவப் பிரமுகர்களுடனும்பேச்சு வார்த்தை நடத்தி ஆலயப் பிரவேசப்பிரச்னைக்கு ஒரு சமரசத்தீர்வுகாண முயற்சிசெய்த அரசாங்க அதிபர் ஜனநாயகமுறையில் மற்றுமொரு முயற்சி செய்ய வாய்ப்பிருக்கிறது. இதற்கு எம்.பி.க்கள், காரியாதிகாரிகள், பொதுமக்கள் ஆகியோர் ஒத்துழைப்பளிக்க வேண்டும். சில கிராமப்பகுதிகள் எழுபதுசதவீதமான மக்கள் ஆலயப்பிரவேசத்தை ஆதரிப்பதால் சகல பகுதிகளிலும் பிரசாரம் நடத்தி அதேசமயம் ஆலயப்பிரவேசத்திற்கென வாக்கெடுப்பும் நடத்துவது பொருத்தமாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும். சிலவருடங்களுக்கு முன் அராலியில் இவ்வித வாக்கெடுப்பு நடைபெற்று எதுவிதசம்பவமுமின்றி அமைதியானமுறையில் ஆலயப் பிரவேசம் நடைபெற்றது. இதனால் கிராமங்களில் ஐச்கியமும் பலப்படும்.

# ஐயாறன் எழுதுவது

திருச்சியில் இறங்கியதும் 'அசோகபவன்' ஹோட்டலில் தங்குவது பலருக்கும் வழக்கம். அங்குதான் இந்திய விமானக் காரியாலயமுமுள்ளது. இதைப்பற்றி ஒரு விஷயம். சில வருடங்களுக்கு முன்பாக 'ஏர் ஸிலோன்' காரியாலயம் ஒரு பெரிய கட்டிடத்தில் வசதியாக இருந்தது, 'டபிள் டயசுகள்' ஆட்சிக்காலத்தில் அந்த 'ஏர் ஸிலோன்' காரியாலயத்தை மூடிவிட்டு, இலங்கைக்கு விமான டிக்கெட் அளிக்கும் பொறுப்பை திருச்சியிலுள்ள இந்திய விமான ஸ்தாபனத்தாரிடம் ஒப்புவித்தார்கள். ஏர்ஸிலோன் காரியாலயத்திலிருந்த உயர்ரக நாற்காலிகள் முதலியவற்றை மிகச்சொற்ப விலைக்கு விற்றுவிட்டனராம்.

இப்போது 'ஏர்ஸிலோன்' மூலம் இலங்கைக்கு வரும் பிரயாணிகள் திருச்சியிலே இடம் 'புக்' செய்ய மிகக் கஷ்டப்படுவதாகவும் 'சம்திங்' கொடுத்தால்தான் இடம் கிடைப்பதாகவும், ஏற்கெனவே 'புக்' செய்த இடத்தையும் வேறு சிலருக்குக் கொடுத்து வருவதாயும் சில புகார்கள் கேள்விப்பட்டேன். திருச்சியில் இறங்கியதுமே முன்ஜாக்கிரதையாக, திரும்பும் விமானத்துக்கும் 'புக்' செய்துவிட வேண்டுமென்று ஒரு நண்பர் யோசனை கூறியிருந்தார். அதன்படி செய்ததால் என் விஷயத்தில் சங்கடமெதுவும் ஏற்படவில்லை. ஆனாலும் திருச்சியிலே முன்போல் 'ஏர் ஸிலோன்' ஆபீஸை [எவ்வளவு செலவானாலும்] மீண்டும் ஆரம்பிக்க வேண்டியது அவசியமாகும். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் கூடுமான வரை தொடர்பில்லாமல் செய்ய வேண்டுமென்ற கொள்கையால் முந்திய ஆட்சியினர், இந்தியா-இலங்கைப் பிரயாண விஷயமாக பற்பல 'கெடுபிடி' நடவடிக்கைகளை எடுத்தனர். இலங்கைப் பொதுமக்களும் இதை ஆட்சேபிப்பது போல், பழைய ஆட்சியாளரிடம் மீண்டும் அதிகாரத்தை ஒப்புவிக்க மறுத்தனர். இதை உணர்ந்து இலங்கை தேசிய அரசாங்கம் பழைய ஆட்சி செய்த தவறுகளைப் படிப்படியாக நீக்க முன்வர வேண்டும். இதில் ஒன்று மீண்டும் திருச்சியிலே 'ஏர் ஸிலோன்' விமான காரியாலயத்தை மட்டுமன்றி, அங்கு இலங்கை உதவி ஹைகமிஷனர் ஆபீஸையும் மீண்டும் ஆரம்பிக்க வேண்டும். 'ஐ. நா. யாத்திரை வருடமாகிய' இவ்வாண்டை முன்னிட்டு, நம் இருதேச அரசாங்கங்களும் பேசிப் பிரயாணத் தடைகளைக்குறைப்பின் திருச்சி-யாழ்ப்பாணப் பாதையில் நல்ல வருமானமும் லாபமுமிருக்குமென்பது உறுதி. இப்போது வீண் தடைகளைப் போட்டுக் கொண்டு, நஷ்டத்தில் நமது விமான சர்வீஸை நடத்துவது பலவிதங்களிலும் தீமையாகும்.

ஏதோ சொல்ல வந்து எங்கோ சென்றுவிட்டேன். திருச்சியிலே இப்போது புதிய புதிய ஹோட்டல்கள் வசதியான அறைகளுடன் கட்டப்பட்டுள்ளதைக் கண்டேன். 'செல்வம்ஸ்' ஒட்டல் சில வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. நடுத்தரப் பிரயாணிகளுக்கு வசதியான முறையிலுள்ளது. இப்போது 'அஜந்தா ஓட்டல்' பக்கத்திலேயே கட்டப்பட்டிருக்கிறது. எல்லாம் நவீன முறையிலுள்ளன. ரப்பர் மெத்தை, வெந்நீர், குளிக்கும் அறை, குடிதண்ணீருக்காக அழகான ஒரு 'பாட்'. சூடு ஆறுதபடி சின்னக் குழாயுடன் உள்ளது. விலை 45 ரூபாயாம். சிப்பந்திகளெல்லாரும், விதவிதமான 'யூனிபாம்' உடையுடன் உள்ளனர். எல்லாம் நல்லதுதான். ஆனால் உணவு விலை, ரூம் வாடகை எல்லாம் அதிகம். ஒரு சின்ன பூரி 40 சதமாம்! ஒருசாப்பாடு இரண்டுரூபாய் என்றாலும் அங்கு நல்ல வியாபாரம். ரூம்கள் கிடைப்பது கஷ்டம்!

தஞ்சாவூர் ஸ்டேஷனில் மச்சின் மீது ரயில்வே ரெஸ்டிங் ரூம்கள் உள்ளன. மிக வசதி. இருவர் இருக்கக்கூடிய அளவுக்கு 6 ரூபாய் வாடகை. மற்ற ஓட்டல்களுடன் ஒப்பிடுகையில் இது மிக மலிவு. சென்னையிலே புதிது புதிதாக நவீன வசதிகளுடன் ஒட்டல்கள் கட்டப்படுகின்றன. அங்கு ராயப்பேட்டையிலே 'ஸ்வாகத்' என்ற புதிய ஒட்டல் வசதியானதென்றும், கட்டணமும் நிதானமானதென்றும் கேள்விப்பட்டு சென்னையில் நேரே அங்கு சென்றேன். ஏராளமான அறைகள் இருந்தும் அச்சமயம் வெஸ்ட்இண்டீஸ் கிரிக்கெட் பந்தயம் பார்க்கத் தூர இடங்களிலிருந்தும் பலர் வந்ததால் சென்னையில் எந்த ஒட்டலிலும் இடம் கிடைக்கவில்லை. பந்தயம் முடிந்துவிட்டதால் அறைகள் காலியாகலாமென்றும் இரண்டொரு மணிநேரம் காத்திருந்தால் கிடைக்குமென்றும், மயிலாப்பூரில் உள்ள 'நியூவூட்லண்டில்' தெரிவித்தனர். கட்டணம் அதிகம்தான். என்றாலும் வேறு வழியின்றி அங்கு காத்திருந்தேன்.

அப்போது அதிகாலை 6 மணியிருக்கும். மட்டக்களப்பு எம். பி. ராஜதுரையை அங்கு காண மிக மகிழ்ச்சியாகவும் வியப்பாகவும் இருந்தது. எம். ஜி. ஆரை ஆஸ்பத்திரியில் காணவே தாம் பறந்துவந்த தாயும் அவருக்கு ஆபத்து இல்லையென்றும் தெரிவித்தார்.

சென்னையிலே புதிதாகக் கட்டப்படுவதில் பெரும்பாலும் 'வெஜிடேரியன்' ஓட்டல்கள். கள்ளுக்கடைகளை மூடிவிட்டதால் இப்போது ஓட்டல்காரர்களுக்குத்தான் நல்ல வேட்டை என்று ஒரு மாஜி குடிகாரர் தெரிவித்தார். இது எப்படியாயினும் அவ்விதமான சாப்பாடு முதலிய வசதியுள்ள ஓட்டல் கொழும்பில் கூட ஒன்று கிடையாது. யாழ்ப்பாணத்திலே கேட்கவேண்டுமா? தக்க சமையல் ஆட்கள் இந்தியாவிலிருந்து வரமுடிந்தால், அப்படியான ஏற்பாடுகளை இங்கும் செய்யலாமென்று ஒரு பிரபல ஓட்டல்காரர் கூறுகிறார். ஆனால் நமது அரசாங்கத்தின் மனம் எப்போது மாறுமோ!

கழுதை குங்குமந்தான் சுமந்தெய்த்தாற், கைப்பர் பாழ்புகமற்றது போலப், பழுது நானுழன்றுள் தடுமாறிப், படுசுழித்தலைப்பட்டனன் எந்தாய், அழுது நீயிருந்தென் செய்திமனனே, அங்கணு அரனேயென மாட்டா, இழுதையேனுனக்கொர் உய்வகையருளாய், இடைமருதுறை எந்தைபிரானே.

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

[என் அப்பனே, திருவிடைமருதூரில் எழுந்தருளியிருக்கின்ற எம் குலதேவனே, கழுதையானது குங்குமப் பொதியைச் சுமந்து மெய் வருந்தினால், அதனால் சிறப்பொன்றும் இல்லாமை கருதி அனைவரும் நகைப்பர். அது போல அடியேன் உன் தொண்டினை மேற்கொண்டு அதன் மெய்ப்பயனைப் பெறுமல் மனந்தடுமாறி வெள்ளத்தில் உண்டாகின்ற சுழியிடை அகப்பட்டவன்போல இவ்வுலக வாழ்க்கையில் அலமருவேனாயினேன். 'மனமே நீ நம் இறைவனுக்கு மெய்த்தொண்டு செய்யாது கவலைப்பட்டிருந்து என்ன பெறப்போகின்றாய்' என்று நெஞ்சிற்கு அறிவுறுத்தவும், 'அங்கணனே அரனே' என்று உன்னை அன்பினால் துதிக்கவும்மாட்டாத அறிவிலியாகிய எனக்கு, நீ மனம் இரங்கி உய்யும்நெறியொன்றை வழங்கியருளாய்.]

வடமாகாணத்தில்

# பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுக் குழுக்கள்

## குற்றச் செயல்களைக்குறைக்க பொலிஸ் அதிபர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், திங்கள் வடமாகாணத்திலுள்ள சகலபொலிஸ் நிலையங்களிலும் பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுக்குழுக்களை அமைக்க வடமாகாண பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

வடமாகாணத்தில் அதிகரித்து வரும் கள்ளக்கடத்தல், சட்டவிரோதக் குடியேற்றம், களவுகள், குற்றச் செயல்களை முற்றாகத் தடை செய்யும் முகமாக அவ்வப் பகுதியைச்சேர்ந்த 15 பொதுமக்களின் பிரதிநிதிகள் இக்குழுவில் அங்கம் வகிப்பார்கள். அவ்வப்பகுதி பொலிஸ் சுப்ரின்டன், உதவிப் பொலிஸ் சுப்ரின்டன், பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி ஆகியோரின் தலைமையின்கீழ் இக்குழுக்கள் இயங்கும். மாதம்ஒருதடவை இக்குழுக்கள் கூடி அவ்வப்பகுதியின் நிலைமை பற்றி ஆராயும்.

இரவில் பொலிசாருடன் ரோந்துசுற்றுதல், கள்ளக் கடத்தலில் ஈடுபடுபவர்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்தல்போன்ற வேலைகளில் ஈடுபடுவதற்காக ஒவ்வொரு பொலிஸ் பகுதியிலும் வசிக்கும் ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்கள், ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், கிராமசபை, பட்டினசபைத் தலைவர்கள், சமாதானநீதவான்கள் உட்பட 15 பிரமுகர்களை இக் குழுவில் தெரிவதெனவும் அதிகமாக இக் குழுக்கள் மார்ச்மாதம் முதலாம்திகதியளவில் அமைக்கப்படும் எனவும் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் நமது நிருபரிடம் தெரிவித்தார். [ந. நி.]

## விநாயகர் விக்கிரகம்

நயினாதீவு, ஞாயிறு நயினாதீவுசெம்மணத்தம்புலம் ஸ்ரீவீரகத்திவிநாயகர் ஆலயத்தில் சுமார் ஒன்றரை அடி உயரமான விநாயகர்விக்கிரகமொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்தின் மூலஸ்தான திருப்பணி வேலையின்போது ஆலயத்தில் இரண்டாம்மண்டபச் சுவர் இடிக்கப்பட்டதென்றும் அப்பொழுது நிலத்துக்கடியில் ஐந்துஅடி ஆழத்தில் இந்த விக்கிரகம் கண்டு பிடிக்கப்பட்டதென்றும் கூறப்படுகிறது.

சுமார் 60 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கூறப்படும் இவ்விக்கிரகம் தற்போது பொதுமக்களின் தரிசனைக்காக ஆலயத்தில்வைக்கப்பட்டுள்ளது.

## மார்ச் 6-ல் ஏற்றுக்கொள்ளப்படும்

குமுழமுனை, ஞாயிறு முள்ளியவளை, கரிக்கட்டுமூலைதெற்கு ஆகிய கிராமசபைகளின் தேர்தல்களில் போட்டியிடும் அபேட்சகர்களின் நியமனப்பத்திரங்கள் மார்ச் 6-ம் திகதி வவனியா தேர்தல் அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்படும்.

## "கிராமசபை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேன்."

இவ்வாறு பூவரசங்குளத்தில் நடைபெற்ற கிராம முன்னேற்ற வருடாந்தப் பொதுக்கூட்டத்தின் போது தலைமைவகித்துப் பேசிய வவனியா தெற்கு தமிழ் பிரிவு காரியாதிகாரி திரு. என். பூரணலிங்கம் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் நாட்டில் இன்று அனேகர் வேலையின்றி தங்களின் காலத்தை போக்கிக் கொண்டு இருக்கிறார்களெனவும் இவர்கள் குறைந்தது அரை ஏக்கர் நிலத்தில் என்றாலும் உணவு உற்பத்தி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

நடப்பு வருட உத்தியோகத்தராக திரு. கே. குமாரசாமியும், காரியதரிசியாக திரு. பி. பரஞ்சோதியும், தனாதிகாரியாக திரு. கே. பாலசிங்கமும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாட்டில் நாளை இறுதி சுற்று வாக்களிப்பு

## மணிப்பூர் ராஜ்ய தேர்தலில் முதன்மந்திரி வெற்றிபெற்றார்

புதுடில்லி, பெப். 19

மணிப்பூர் ராஜ்ய சட்டசபைத் தேர்தலில் இதுவரை எண்ணப்பட்ட வாக்குகளின்படி காங்கிரஸ் கட்சியினர் நான்கு ஸ்தானங்களையும் சுயேச்சையாளர் இரண்டு ஸ்தானங்களையும் கைப்பற்றியுள்ளனர். இவர்களைத் தவிர இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகர் ஒருவரும் சம்யுக்த சோஷலிஸ்ட் அபேட்சகர் ஒருவரும் வெற்றிபெற்றுள்ளனர். எட்டுத் தொகுதிகளைத் தவிர்ந்த மற்றைய தொகுதிகளில் வாக்குகள் எண்ணுவது இருபத்தோராம் திகதி மீண்டும் ஆரம்பமாகும்.

### மணிப்பூர் முதன் மந்திரி கொய்ரான் சிங்கும் வெற்றிபெற்றுள்ளார்

இன்று மூன்று ராஜ்யங்களிலும் இரண்டு யூனியன் பிரதேசங்களிலும் வாக்களிப்பு நடைபெற்றது மைசூரில் இன்றுடன் தோதல்கள் முடிவடைந்தது. ஹரியானு, பஞ்சாப், சண்டிகார் ஆகிய இடங்களிலும் இன்று காலையில் வாக்களிப்பு ஆரம்பமாகி மாலையில் முடிவடைநதது. இன்று நடைபெற்ற தேர்தல்களில் ஐந்து கோடி எழுபது லட்சம் பேர் வாக்களித்திருப்பார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதனுள் நாட்டின் மொத்த வாக்காளர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் தங்களது வாக்குகளை அளித்துவிட்டனர் என்று தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

### லட்சத் தீவு மக்களின் உற்சாகம்

நேற்று அரபுக்கடல் தீவான லட்சத் தீவுகளிலும் அந்தமான் தீவுகளிலும் வாக்களிப்பு முதற்தடவையாக நடைபெற்றது. லட்சத் தீவுகளில் மினிக்காய், அமிந்தீவு ஆகிய இடங்களில் வாக்களிப்பு பதற்றமின்றி நடந்தது. லட்சத்தீவு மக்கள் மிகவும் உற்சாகத்துடன் வாக்களித்தனர் என்றும் ஆண்களுடன் பெண்களும் போட்டியிட்டு வாக்களித்தனர் என்றும் செய்திகள் கிடைத்துள்ளன. இங்கு அரசியல் கட்சிகள் எதுவும் போட்டியிடாதது குறிப்பிடத்தக்கது.

### நூறு சத விகித வாக்களிப்பு

இதுவரை நாட்டின் பல பகுதிகளிலும் நடைபெற்ற தேர்தல்களில் வட ஆற்காடு பகுதியில் வேலூர் அருகேஉள்ள கிராமம் வாக்களிப்பில் முன்னணி வகித்துள்ளது. இங்குள்ள 1035 வாக்காளர்களில், ஆறு பேர் மட்டுமே வாக்களிக்கவில்லை. இக்கிராமத்தில் மட்டுமே நூறு சத விகித வாக்களிப்பு நடைபெற்றுள்ளது.

### தமிழ்நாட்டில் 3-வது சுற்று வாக்களிப்பு

தமிழ்நாட்டில் செவ்வாய்க்கிழமை இருபத்தோராம் திகதி கடைசிச் சுற்று [மூன்றுவது கட்டம்] வாக்களிப்பு நடைபெறும், முதலாவது சுற்று வாக்களிப்பு 15-ம் திகதியும் இரண்டாவது சுற்று வாக்களிப்பு 18-ம் திகதியும் நடைபெற்றது. கடைசிச் சுற்று வாக்களிப்பு நடைபெறும், இருபத்தோராம் திகதி வாக்குகள் எண்ணுவது ஆரம்பிக்கும்.

### கேரளத்தில் இன்று தேர்தல்

கேரளத்தில் நாளை திங்கட்கிழமை தேர்தல் ஆரம்பமாகிறது. இங்கு ஒரு கோடியே எழுபத்தைந்து லட்சம் வாக்குச் சீட்டுகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் கமிஷனர் அறிவித்துள்ளார்.

இன்று டில்லியிலும் வாக்களிப்பு நடைபெற்றது. ஏழு லோக சபை ஸ்தானங்களுக்கு போட்டி இடம்பெற்றது. இதனுடன் டில்லி கார்ப்பரேஷனுக்கும் இன்று தேர்தல் நடைபெற்றது. 100 ஸ்தானங்களுக்கு 500 பேர் போட்டியிட்டனர்.

### 'அமைதியான வாக்களிப்பு'

கடந்த நான்கு தினங்களாக நாட்டின் பல பகுதிகளிலும் தேர்தல்கள் சுமுகமாக நடைபெற்றிருப்பதாக அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். ஒரு சில இடங்களில் அசம்பாவிதமான சம்பவங்கள் நிகழ்ந்தபோதிலும் அவை புறக்கணிக்கப்படவேண்டுமென்றும் பொதுவாக எல்லா இடங்களிலும் வாக்களிப்பு அமைதியாகவே நடைபெற்றுள்ளதென்றும் கூறினர்.

நேற்று நடைபெற்ற தருமபுரி சட்டசபைத்தேர்தலில் 89 சத விகிதத்தினர் வாக்களித்தனர். ஹைதராபாத்தில் ஒரு சிறிய சம்பவத்தைத் தவிர வாக்களிப்பு சுமுகமாக நடைபெற்றது. சிம்லாவில் நேற்றுக்காலையில் கடுமையான பனி வீசியதால் வாக்களிப்பில் மந்தநிலை காணப்பட்டது. ஹிமாசலப்பிரதேசத்திலும் நேற்றுக் கடுமையான பனியினால் வாக்களிப்பில் சோர்வு காணப்பட்டது.

### சிறுசிறு சம்பவங்கள்

- ராஜஸ்தானில் நேற்று வாக்களிப்பு நிலையமொன்றில் கடமையாற்றும் அதிகாரியொருவருக்கு ''தந்தை இறந்து விட்டதாக'' தந்திவந்தது. ஆனால் தேர்தல் அதிகாரி துக்கத்தை அடக்கிக்கொண்டு தனது கடமை முடிந்து மாலையில் தான் வீடு திரும்பினார். அப்பொழுது இறுதிச் சடங்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்ததாம்.
- இதே நேரத்தில் ராஜஸ்தானில் மற்றுமொரு இடத்தில் மகிழ்ச்சியான சம்பவமொன்று நடைபெற்றுள்ளது. திருமணக் கோலத்திலிருந்த மாப்பிள்ளை ஒருவர், கல்யாணக் குழுவினருடன் வாக்களிப்பு நிலையத்துக்கு ஊர்வலமாகச் சென்று வாக்களித்து விட்டு பின்னர்தான் மணமகள் வீட்டுக்குத் தாலிகட்டச் சென்றாராம்.
- மகாராஷ்டிராவில் இம்டி கிராமத்தில் நேற்று சுவையான சம்பவமொன்று நிகழ்ந்துள்ளது. 61 வயதுள்ள மூதாட்டியொருவர் வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்றிருந்தார். வாக்குச்சீட்டை கையில் வாங்கியதும் கரங்களைக் கூப்பி கண்களை மூடி பக்திப்பாட்டொன்றை பாடினார். பின்னர் வாக்களிக்கும் பெட்டிக்குச் சென்று மீண்டும் பக்திப்பாடலைப் பாடினார். அதன் பின்னரே வாக்குச் சீட்டைப் பெட்டிக்குள் போட்டார். கேட்டபொழுது, வாக்குச் சீட்டை தாம் தெய்வமாகக் கருதுவதாகக் கூறினார்.
- அலகபாத் நகர வடக்கு சட்டசபைத்தொகுதியில், நடக்கமுடியாத வாக்காளர் ஒருவர் மார்பினால் ஊர்ந்து சென்று வாக்களித்தார். ஒரு வாக்களிப்பு நிலையத்தில் சாதுக்களும் பிச்சைக் காரர்களும் வாக்களித்தனர்.
- ரேபரய்லி தொகுதியில் லோகசபைக்கு போட்டியிடும் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் பெயர், வாக்குச்சீட்டில் தவறுதலாக அச்சிடப்பட்டிருந்தது: வாக்குச் சீட்டுகளில், ''திருமதி இந்திரா நேரு காந்தி'' என்றிருந்தது.
- லக்ஷமண்பூர் சட்டசபைத் தொகுதியில் ஒரு பெண் வாக்காளர், தமது வோட்டை அளிக்காமலேயே வீடுவிரும்ப நேரிட்டு விட்டது. வாக்களிப்பு நிலையத்துக்குச் செல்லும் வழியில் இப்பெண் ஒரு குழந்தையைப் பிரசவித்தாள்.
- வட ஆற்காடு தொகுதியில் செமாக்கம் வாக்களிப்பு நிலையத்தில் பல வாக்காளர்கள் குடிபோதையில் இருந்தனராம். ஒருவர் எல்லாச் சின்னங்களின் மீதும் முத்திரையிட்டு, சீட்டை இரண்டாக மடித்து தேர்தல் அதிகாரியிடம் கொடுத்தார். ''எல்லா அபேட்சகர்களும் என்னிடம்வந்து வோட் கேட்டார்கள். அதுதான் எல்லோருக்கும் வாக்களித்திருக்கிறேன்'' என்றார் அந்த வாக்காளர்.
- திருமங்கலம் சட்டசபைக்குப் போட்டியிட்ட திரு. முத்துராமதேவர் காலமானதைத் தொடர்ந்து இங்கு தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. திரு. முத்துராம தேவர் தமது 59-வது வயதில் நேற்றுக் காலமானர்.

# நீடித்த யுத்தத்துக்கு ஹனேய் தயார்?

ஹனேய், பெப் 19

''வியட்னம் யுத்தம் நீடிக்கும்வரை போராடத் தயார்'' என்று வடக்கு வியட்னம் அதிபர் ஹோ-சி-மின் தெரிவித்துள்ளார்.

ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த பத்திரிகை நிருபர் ஒருவருக்கு அளித்த பேட்டி ஒன்றில்தான் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

வடக்கு வியட்னமில் விமானக்குண்டுவீச்சை அமெரிக்கா மீண்டும் ஆரம்பித்திருப்பது குறித்து ஹங்கேரி நிருபர் கேட்டபொழுது, ''வியட்னம் நெருக்கடிக்கு ஒரு முடிவு காணும்வரை போராடுவதற்கு வடக்கு வியட்னம் தயாராகிவிட்டது''. இதனை அடைவதற்கு எவ்வளவு காலமானாலும் பரவாயில்லை'' என்று அதிபர் ஹோ-சி-மின் பதிலளித்தார்.

# இன்று ஆரம்பமாகும் உலகதேயிலைமகாநாடு

லண்டன், பெப். 19

சர்வதேச தேயிலை மகாநாடு 20-ந் திகதி லண்டனில் ஆரம்பமாகிறது. 21 நாடுகளைச் சேர்ந்த தேயிலை நிபுணர்கள் இம்மகாநாட்டில் பங்கு பற்றுகின்றனர். ஐ. நா. உணவு, விவசாய ஸ்தாபனத்தின் ஆதரவில் நடைபெறும் இந்த மகாநாட்டை பிரிட்டிஷ் விவசாய மந்திரி திரு. பிரட்பேட் ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்துவார்.

லண்டனிலுள்ள லன்கஸ்டர் மாளிகையில் இம்மகாநாடு நடைபெறுகிறது. தேயிலைஏற்றுமதி, இறக்குமதி செய்யும் நாடுகள்அனைத்தும் இந்த மகாநாட்டில் பங்குபற்றுகின்றன. இம்மகாநாடு ஆரம்பமானதும் தலைவர், உப தலைவர் தெரிவு நடைபெற்று பின்னர் தேயிலை வர்த்தகத்தை எதிர்நோக்கும் பிரச்னைகள் பற்றி நிகழ்ச்சிநிரல் ஒன்று தயாரிக்கப்படும்.

தேயிலை, உற்பத்தி, கொள்வனவு, ஏற்றுமதி இறக்குமதி நிலவரங்கள், விலைவாசிகள் ஆகியன சம்பந்தமாக இம்மகாநாட்டில் விரிவான பரிசீலனை நடைபெறும். அடுத்த 10 ஆண்டு காலத்தில் தேயிலை வர்த்தகத்தின் எதிர்காலம் பற்றியும் மகாநாட்டில் ஆராயப்படும்.

# சின இராணுவம் லாஸாவுக்கு விரைகிறது

## தெருச்சண்டையில் 100 பேர் பலி

டோக்கியோ, பெப்.19

திபெத் தலைநகர் லாஸாவில் மா-ஸே-துங் ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்குமிடையே தெருச்சண்டை மூழுகின்றதென்றும் இதுவரை நடைபெற்ற மோதல்களில் நூறு பேர் மாண்டனர் என்றும் இங்கு கிடைக்கும் செய்திகள்தெரிவிக்கின்றன.

மா—ஸே—துங் ஆதரவாளர்கள் லாஸாவில் ஒலிபரப்பு நிலையத்தை மீட்டுக்கொண்டனர் என்று கூறப்படுகிறது.

இதற்கிடையே மா-ஸே-துங் ஆதரவாளர்களுக்கு உதவியாக லாஸாவுக்கு மூன்று சீன இராணுவ டிவிஷன்கள் அனுப்பப்பட்டுள்ளதாக பீகிங் வானொலி அறிவித்துள்ளது. இதனைத் தொடர்ந்து லாஸாவில் மா-ஸே-துங் எதிர்ப்பாளர்கள் ஒடுக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

திபெத் எல்லையுடனுன மாகாணங்களில் மா-ஸே-துங் ஆதரவாளர்கள் தொல்லைகளுக்குள்ளாகி வருவதாக ஏஜன்ஸி செய்திகள்கூறுகின்றன.

# நவீன நிலையம்

லண்டன். பெப். 19

பிரிட்டிஷ் வெளிநாட்டு விமானக் கூட்டுஸ்தாபனம் லண்டன் விமானநிலையத்தில் 6,000,000 பவுண் செலவில் பிரயாணிகளுக்கென நவீன தங்கு நிலையம் ஒன்றை நிறுவவிருக்கிறது. 1970ல் சூப்பர் ஸோனிக் விமான சேவை ஆரம்பிக்கப்படவிருப்பதால் ஏற்படவிருக்கும் பிரயாணிகள் நெருக்கடியை இந்தப் புதிய நிலையம் சமாளிக்கக்கூடியதாகவிருக்கும்.

# இலங்கைதூதர்-ராணி சந்திப்பு

லண்டன், பெப்.19

ஜனவரி 19-ம் திகதி லண்டனில் இலங்கையின் புதிய ஹைகமிஷனராகப் பதவியேற்ற சேர் லலிதா ராஜபக்ஸா பக்ஹிங்ஹாம் மாளிகைக்குச் சென்று எலிசபெத் மகாராணியாரைச் சந்தித்தார். சேர் ராஜபக்ஸாவுடன் திருமதி ராஜபக்ஸாவும் சென்றிருந்தார். எலிசபெத் மகாராணியாருடன் இருவரும் சுமார் 30 நிமிடங்கள் வரை சம்பாஷித்தனர்.

# பச்சைநிற கோழிமுட்டை

லூஸிவில்லி, பெப். 19

உருவத்தில் சிறிய கோழியொன்று இங்கு கடந்த ஆறு மாத காலமாகப் பச்சைநிற முட்டையிடுவது இங்குள்ள மக்களுக்குப் பெரும்ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

கால்நடை டாக்டர்கள், சர்வகலாசாலைப் பேராசிரியர்கள் இந்த அதிசயத்தை ஆராய்ந்தனர். ஆனால் காரணம் என்னவென்பதை அவர்கள் இன்னும் கண்டுபிடிக்கவில்லை.

# களனி பட்டினசபை தலைவர்

## கொலை வழக்கில் விடுதலை

கொழும்பு, சனி

களனி பட்டினசபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவரும் கொலைவழக்கொன்றில் எதிரியாகக் கருதப்பட்டு றிமாண்டில் இருந்து வந்தவருமான மைக்கல் பாஸ் என்றழைக்கப்பட்ட டபிள்யு. கே. டி. கிறிசேன இன்று கொழும்பு மாவட்ட கூட்டு நீதவானல் விடுதலை செய்யப்பட்டார்.

இவருடன் கொலைக் குற்றஞ் சாட்டப்பட்ட இன்னெருவரான டொன் புரேமசிறி சுப்ரீம் கோர்ட்டின் விசாரணைக்கு பாரப்படுத்தப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்ப் பல்கலைக் கழகம் அவசியமா?

### வட்டுக்கோட்டைஎம்.பி. விளக்கம்

புன்னாலைக்கட்டுவன், ஞாயிறு

''அரசியலில் தமிழர் புறக்கணிக்கப்படுவதுபோல் கல்வித்துறையிலும் புறக் கணிக்கப்படக்கூடாது என்பதற்காக தமிழ்ப்பல்கலைக் கழகத்தை உருவாக்கத் தமிழ்ப் பேரறிஞர்கள் தீர்மானித்தனர். அத்தீர்மானத்தின் விளைவே இன்று திருக்கோணமலையில் உள்ள உப்புவெளியில் காணப்படும் 90 ஏக்கருக்கு மேற்பட்ட நிலமும் கட்டிடமுமாகும்.''

இவ்வாறு உரும்பராய் இந்துக்கல்லூரி சரித்திர அரசியல் மன்றத்தில் 'தமிழ்ப் பல்கலைக்கழகம்' என்ற தலைப்பில் பேசிய வட்டுக் கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

சங்கத் தலைவர் திரு. வி. புஷ்பராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசியதாவது-

பௌத்த கலாசார வளர்ச்சிக்காக நிறுவப்பட்ட வித்தியோதய, வித்தியாலங்கார பல்கலைக்கழகங்களும் இன்று பூரணத்துவம்பெற்று பல கலைகளையும் போதிக்கின்றன. இட நெருக்கடி போன்ற காரணங்களைக் காட்டி, தமிழ்மாணவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கு மாற்றப்படுகின்றனர். இந்நிலையில் தமிழர் தமக்கென ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவவேண்டிய காலம் அதிக தூரத்திலில்லை.

## 'சமய வாழ்க்கை அவசியம்'

சாவகச்சேரி, ஞாயிறு

''மனிதன் மனிதனுகவாழ வேண்டுமானுல் சமய வாழ்க்கைவாழவேண்டும். ஆதலால்தான் தேசிய அரசாங்கமும் சமயத்துக்கு முக்கியத்துவ மளித்து வருகிறது''

இவ்வாறுசந்திரமௌலீஸர் ஆலய வீதிகளைச் சிரமதான முறையில் செப்பனிடும் பணி மேற்கொள்ளப்பட்ட போது சைவப்புலவர் ச. கைலாயபிள்ளை கூறினுர்.

சந்திரபுர ஸ்கரந்தவரோதய மகாவித்தியாலயம், சாந்தநாயகி வித்தியாசாலை, சைவப்பிரகாச வித்தியாசாலை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகியபாடசாலை மாணவர்கள் இந்த சிரமதானப்பணியில் ஈடுபட்டனர்.

திவ்யஜீவன சங்கத்தலைவர் பிரம்ம ஸ்ரீ சு. சோமசுந்தரக் குருக்கள், சிரமதானப் பணியை மேற்கொண்டவர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

## புங்குடுதீவில் குடிதண்ணீர் கஷ்டம

ஊர்காவற்றுறை, ஞாயிறு

ஆண்டு தோறும் புங்குடுதீவில் ஏற்படும் தண்ணீர் தட்டுப்பாடு இவ்வாண்டும் 'தலைகாட்டத்' தொடங்கி விட்டது.

ஊரதீவு. மடத்துவெளி. வல்லன் ஆகிய இடங்களில் குடிதண்ணீருக்கு மக்கள் கஷ்டப்படுகிறுர்கள். வயல் வெளிகளில் தோண்டும் குன்றுகளில் தண்ணீர்பெறுவோர் கூட்டமாகக் கூடுகின்றனர். இதற்கிடையே [illegible] நீர் விநியோகத்தை [illegible]படுத்துவதற்கு நடவடிக்கள்மேற்கொள்ளப்பட்டு வருவதாகத்தெரிகிறது. புங்குடுதீவின் கிழக்குப் பகுதியில் பத்தாவது வட்டாரத்தில்அரசினர்கிணறுகளைப்பரிசோதனை செய்துவருகின்றனர். [illegible] அளவு, நீரின் தன்மை [illegible]ன அறியப்பட்டுவருகின்றன.

## எதிரிகள் விடுதலை

ஊர்காவற்றுறை, ஞாயிறு

சரவணைக் கிராமத்தைச் சேர்ந்த என். நடராசா, என். இராசரத்தினம், கே. கந்தையா ஆகியோர் சரவணை கிழக்கு வாசியான முருகப்பர் சின்னத்துரையைக் கத்தியால்வெட்டிக் காயப்படுத்தியதாக ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு விசாரணையின்பின் நீதிபதி திரு. ரி. ஜே.இராசரத்தினம் போதிய சாட்சியங்கள் இல்லாமையால் எதிரிகளை விடுதலை செய்தார்.

## அபராதம்

ஊர்காவற்றுறை. ஞாயிறு

நாரந்தனையைச் சேர்ந்த மாவிலு அமிர்தநாதர் என்பவர் சட்டவிரோதமாகச் சாராயம் விற்றதாகக் குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கில் ஊர்காவற்றுறை நீதிபதி திரு. ரி. ஜே. இராசரத்தினம் எதிரியைக் குற்றவாளியாகக்கண்டு 150 ரூபா அபராதம் விதித்தார்.

## தற்கொலை

ஊர்காவற்றுறை, ஞாயிறு

வாழ்க்கையில் வெறுப்புற்ற ஒருவர் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் ஊர்காவற்றுறையில் நிகழ்ந்துள்ளது. ஊர்காவற்றுறைச் சந்தையில் மரக்கறி வியாபாரம்செய்த மு. செல்லையா [வயது 46] என்பவரே தற்கொலை செய்த நபராவார்.

சமீபகாலமாக இவர் வாழ்க்கையில் வெறுப்படைந்து இருந்தார் என மரண விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது. திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. என். மகாலிங்கம் விசாரணை நடத்தினுர்.

தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## மாணவர் நடத்தியஆராய்ச்சி

இமையாணன், ஞாயிறு

தொண்டைமானுற்றில் ஆறுபாயும் சில இடங்களில் சென்றவாரம் நீர்வள உயிரியல் ஆராய்ச்சி ஒன்று நடைபெற்றது. வடமாகாண ஆசிரியசங்கத்தினுல் வருடத்திற்கு இரண்டுமுறை நடைபெறும் இவ்வாராய்ச்சிதிட்டத்தில் தொண்டைமானுறு, வல்லை, நாகர்கோவில் ஆகிய இடங்களில் ஆராய்ச்சி நடைபெற்றது. இவ்வாராய்ச்சியை சிலபாடசாலை மாணவர்கள், தங்கள் செய்கைமுறைபயிற்சி வலுவடைவதற்காகச் செய்து வருகின்றனர்.

தொண்டைமானுற்றை மறித்து அணைகட்டப்பட்டபின் நீரின் உப்புத்தன்மை குறைந்துகொண்டே போவதினுல் நீர்வாழ் உயிரினங்களும், தாவரங்களும், சுற்றுடலும் எவ்வகையான மாற்றங்களை அடைகின்றனஎன்பதைப்பற்றியேஅறிவதற்காகஇவ்வாராய்ச்சி நடைபெற்றுவருகின்றது.

வல்லையில் நடைபெற்ற ஆராய்ச்சியில், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவர்கள் சிலர் ஆராய்ச்சி நடத்தினுர்கள்.

## அரசினர் நன்கொடை கிடைக்கவில்லை

அச்சுவேலி, ஞாயிறு

அச்சுவேலிப் பகுதியில் 1966ம் ஆண்டுக்குரிய அரசினர் நன்கொடைப் பணத்தை சனசமூக நிலையங்களுக்கு கொடுக்காததினுல் வாசகர்கள் பெரும்கஷ்டப்படுகின்றனர்.

இதனுல் சில [illegible] நிலையங்களில் புதினப்பத்திரிகையின் [illegible] குறைந்துவருகின்றது.

## 'விருதுகள் வழங்குவது அழகு பார்ப்பதற்கல்ல'

யாழ்ப்பாணம், திங்கள்

''சாரணமாணவர்களுக்கு வழங்கப்படும் வீரவிருதுகள் அவர்கள் அதைத் தங்கள் மேலாடைகளில் பொருத்தி அழகுபார்ப்பதற்கோஅன்றி கண்ணுடிப் பேழைகளில் வைத்துப் பாதுகாப்பதற்கோஅல்ல. அச் சின்னங்களைத் தங்கள் இதயத்தில்நிறுத்தி சமூகத்தொண்டுகளில் அவர்கள் ஈடுபடுவதற்கு உற்சாகம் ஊட்டுவதற்காகவே வழங்கப்படுகின்றன''

மேற்கண்டவாறு இலங்கைப் பெண் சாரணியரின் நூற்ருண்டுவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் பெண் சாரணியர்இயக்கத்தினரால் யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் கொண்டாடப்பட்ட விழாவில் வடமாநில வித்தியாதிபதி திருமதி ஆர். நவரத்தினம் பேசுகையில் தெரிவித்தார்.

திருமதி நவரத்தினம் வடமாநில வித்தியாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் அவர் கலந்துகொண்ட முதலாவது பொது நிகழ்ச்சிஇதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விழாவில் வடமாகாணத்தைச்சேர்ந்த 26 பாடசாலைகள்கலந்துகொண்டன. [ந.நி.]

## சைக்கிளில் சென்றவர் மயங்கிவிழுந்து மரணம

யாழ்ப்பாணம், ஞாயிறு

இருபாலையைச் சேர்ந்த வல்லிசின்னராசா [36வயது] என்பவர் சைக்கிளில் செல்லும்போது திடீரெனமயக்கமுற்று நிலத்தில்விழுந்துமரணமானதுசம்பந்தமாகதிடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ்.கனகரத்தினம் மரணவிசாரணை நடாத்தினுர்.

டாக்டர் எஸ். சுப்பிரமணியம் பிரேதபரிசோதனை நடத்தினுர். காலஞ்சென்றவரின் மனைவியான நித்திலமணி, மற்றும், வள்ளியாச்சி ஆகியோரும்சாட்சியமளித்தபின்னர் இயற்கை மரணம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. [ந.நி]

## கயரோக தேசிய நிவாரண சங்கம்

சுழிபுரம், ஞாயிறு

',ஒருநாட்டின் முன்னேற்றம் அதன் மக்களுடைய ஆரோக்கியத்தின் பரிமாணத்தைப்பொறுத்தே இருக்கிறது. கயரோக தேசிய நிவாரண சங்கமானது ஒரு சாதாரணமனிதனுக்குரிய சங்கமாயிருப்பதுடன், அதன்நடவடிக்கைகள் பரவலாக அமைக்கப்பட்டுள்ளன.''

இவ்வாறு வலிகாமம் மேற்கு கயரோக தேசிய நிவாரணசங்கத்தின் கூட்டத்துக்கு தலைமைவகித்துப் பேசிய சமூகஜோதி திரு.பி. தியாகராசா குறிப்பிட்டார்.

## நல்ல விளைச்சல்

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம், பொன்னுலை ஆகிய இடங்களிலுள்ள நெல் வயல்களில் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இம்முறை எல்லா வயல்களிலும் நல்ல நெல் விளைச்சல் ஏற்பட்டுள்ளது.

## திருவாசகம் ஓதப்படும்

சுழிபுரம், ஞாயிறு

தொல்புரத்திலுள்ள சிதம்பர அம்பலவாண சுவாமியன், மானுமுதலியார்மடாலயத்தில் சிதம்பர நடராசப்பெருமானின் ஆறுஅபிஷேகதினங்களில் திருவாசகம் [illegible] ஓதப்படும்,

# கள்ளக்கடத்தல் சம்பவம் பற்றி அபிப்பிராயபேதம்

## பொலிஸ்—சுங்க பகுதிகளுக்கிடையே

மாவிட்டபுரம். ஞாயிறு

கள்ளக்கடத்தல் பொருட்கள் எனக் கைப்பற்றப்பட்ட பாக்குமூடைகள் சம்பந்தமாகப் பொலிஸாருக்கும், சுங்கப்பகுதியினருக்குமிடையில் அபிப்பிராயபேதம் ஏற்பட்டுள்ளது. இவ்வபிப்பிராயபேதம் மேலிடம் வரை சென்றுள்ளது. இதனுல் கள்ளக்கடத்தல்காரர்கள் மத்தியில் மகிழ்ச்சி நிலவுகிறது.

வல்வெட்டித்துறை பொலிஸார் சில வாரங்களுக்கு முன்னர் வல்வெட்டி ஊரணிக் கடலில் வைத்துக் கைப்பற்றியதாகக் கூறப்படும் சுமார் 38 பாக்கு மூடைகளையும் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் கண்டெடுத்த பொருட்களெனக் [illegible] கூறிச் சமர்ப்பித்ததை வடபகுதிச் சுங்க வட்டாரங்கள் ஆட்சேபித்துள்ளன. இதனுல் வடபகுதி சுங்கக் கலெக்டரும், அரசாங்க அதிபருமான திரு.வேர்ணன் அபயசேகரா, உதவி சுங்கக் கலெக்டர் திரு. பத்திரானு விமலதர்மா ஆகிய இருவரும் இதுபற்றிப் பிரதம சுங்கக் கலெக்டரிடம் புகார்செய்துள்ளதுடன் கோர்ட்டில் ஒப்படைக்கப்பட்ட பாக்குமூடைகளை விசாரணைக்காகச் சுங்கப் பகுதியினரிடம் ஒப்படைக்கும்படிகோரி நீதிமன்றத்தில் மனுவொன்றை சமர்ப்பிக்கும்படி அட்டோர்ணி ஜெனரல் இலாகாவைக் கேட்டுள்ளதாகவும் தெரிகிறது.

### பூநகரி

# செய்திக் கடிதம்

—நமது நிருபர் என். சூரியகுமாரன்—

பூநகரியில் நடைபெற்று வரும் இ. போ. ச. பஸ் சேவை மிகவும் சீர்கேடாகவுள்ளது. பூநகரி—சங்குப்பிட்டிக்கும், பூநகரி—வாடியடிக்கும் ஒருநாளைக்கு ஏழு பஸ்சேவை இருந்தும் சில சமயங்களில், ஒரு சேவை இருப்பதே அருமையாகிவிடும். நான் இ. போ. ச. கிளிநொச்சி டிப்போவிற்குச் சென்றபோது இ. போ. ச. ஏனேஜரிடம் பூநகரிக்கு ஏன் கிரமமாகபஸ் ஓடுவதில்லையென்று கேட்டபோது ''பஸ் இருந்தால் அல்லவா ஓடுவதற்கு'' என்னும் பதில் கிடைத்தது.

### கவனிப்பார்களா?

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கு முன்பாக இருக்கும் விளம்பரப் பலகையில் கேரதீவு நேர அட்டவணைக்கும் தற்போதைய பஸ்நேர அட்டவணைக்கும்அதிக மாறுதல் இருப்பதால் பஸ் பிரயாணிகள் ஏமாற்றம் அடைகிறுர்கள்.

### கைது

சட்டவிரோத குடியேற்றக்காரர் என்ற சந்தேகத்தின்மீது இருளாண்டி வேலு என்பவர் பொன்னுலைகிராம சேவையாளர் திரு. எஸ். தியாகராசாவால் பூநகரி கிராஞ்சியில் கைதுசெய்யப்பட்டுபூநகரிக் காரியாதிகாரியின் உத்தரவின்படி யாழ்ப்பாணம் பொலிசில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

### நூல்நிலையம்

பூநகரி ப. இ. மு. ச. நூல் நிலையக்சட்டட நிதிக்காகபூநகரிவாடியடி மைதானத்தில் காரியாதிகாரி திரு. ரி. இராசதுரை தலைமையில் ஓரே மேடையில் மூன்று நாடகங்கள் இன்று நடைபெறும்.

### தொண்டர்படை

பூநகரியின் பல பாகங்களிலும் திருட்டுச்சம்பவம் அதிகரித்து வருவதை தடைசெய்வதற்காக காரியாதிகாரி திரு. ரி. இராசதுரை ஒவ்வொரு கிராமசேவையாளரின் பிரிவிலும், ஐந்துபேர்களைக்கொண்ட தொண்டர்படையை அமைக்க நடவடிக்கை [illegible]. இத்தெரிவில் ப. இ. மு. ச. அங்கத்தவர்களுக்கு முதலிடம் வழங்கப்படவிருக்கி[illegible].

### கி. ச. தேர்தல்

பூநகரி கிராமசபைத் தேர்தல் பணம்கட்டும் கடைசி நாள் 27-ந் திகதியாகும். கிராமசபை எட்டு வட்டாரங்களைக்கொண்டது. இத்தேர்தலில் கிராமசபைத் தலைவர் திரு. ரி. செல்லத்துரை போட்டியிடவில்லையென்று தெரிவித்துள்ளார்.

### விலைப்பட்டியல் இல்லை

பூநகரி வாடியடி மைதானத்தில் சுமார் இருபது கடைகளுக்கு அதிகமாக இருக்கின்றன. இக்கடைகளில் ஒருசில கடைகளில்மட்டுமேவிலைப்பட்டியல்உண்டு. இக்கடை வியாபாரிகள் பொருட்களைக் கட்டுப்பாட்டுவிலைக்குமீறி அதிக விலைவைத்து விற்கின்றுர்களெனத் தெரிகின்றது. விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் இங்கு விஜயஞ்செய்து மாதங்கள்பல இருக்குமென மக்கள் பேசிக்கொள்கிறுர்கள்.

### இடமாற்றம

பூநகரிகறுக்காய்த்தீவு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. பி. தம்பு,பூநகரி தம்பிராய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

### உப-உணவு

கடந்தவாரம் மல்லி முதலிய உபஉணவுப் பொருட்கள் இங்கு விநியோகிக்கப்பட்டது. இவ்வாரம் மல்லி, மிளகாய் ஒரு கூப்பனுக்கு இரண்டு அவுன்ஸ் கொடுக்கப்பட்டு வருகிறது.

## புதிய நிர்வாகிகள்

கொம்பனித்தெரு, ஞாயிறு

சொழும்பு புங்குடுதீவு இளந்தமிழர்கழகத்தின் ஆருவது ஆண்டுப் பொதுக்கூட்டம் அண்மையில் கழகக்காரியாலயத்தில் நடைபெற்றது.

கழகத்தின் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகக் கீழ்க்கண்டோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் : க.கண்ணன், உபதலைவர் நா. செல்லக்கண்டு செயலாளர், செ. இராசையா, உபசெயலாளர் கு. அருணையா, பொருளாளர் நா.சி. சோமசுந்தரம், உபபொருளாளர் சி. முத்துலிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

கீழ்க் குறிக்கப்படும் பதவிக்கு யாழ்ப்பாணம் ஐக்கிய நெசவு சங்கங்களின் சமாசம் விண்ணப்பம் கோருகின்றது. தகைமையுடையோர் 15-3-67ம் திகதிக்கு முன் பதிவுத் தபால் மூலம் ''கௌரவகாரியதரிசி அவர்களுக்கு, யாழ்ப்பாணம் ஐக்கிய நெசவுச் சங்கங்களின் சமாசம். 10 1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்'' என்ற விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும். விண்ணப்பிப்போர் பதிவுத்தபாலின் மேல்உறையின் இடதுபக்க மேல்மூலையில் ''கணக்கு மேற்பார்வையாளர் பதவி'' எனக் குறிக்கவும்.

**கணக்கு மேற்பார்வையாளர் பதவி**

விண்ணப்பிப்போர் ஆங்கிலம் அல்லது தமிழ் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையில் தமிழ், ஆங்கிலம், எண்கணிதம் அல்லது கணிதம் ஆகிய இம்மூன்று பாடங்களில் திறமைச் சித்தியும், கூட்டுறவுக்கலாசாலைப் பயிற்சியும், தட்டெழுத்து, சுருக்கெழுத்து, வர்த்தக கணிதம் ஆகியவற்றில் அறிவும், இப்பதவி அனுபவமும் விரும்பத்தக்கது.

**வயது:**

15-2-67ம் திகதி அன்று 25 வயதிற்குக் கீழ்ப்படாமலும், 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும்.

**சம்பளம்:**

ரூபா 250 - தொடக்கம் 450/- வரை. அலவன்ஸ்: 33 1/3%.

இங்ஙனம்
[ஒப்பம்] **து. சீனிவாசகம்**
கௌரவ காரியதரிசி.

18-2-67.
யாழ்ப்பாணம்.
2442

கிரிக்கெட்

# யாழ். இந்துக்கல்லூரி மகாஜனுவை வென்றது

யாழ்ப்பாணம், திங். தெல்லிப்பழை மகாஜனுக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி 10 விக்கெட்டுகளால் மகாஜனுக் கல்லூரியை வெற்றியீட்டியது. முதல் இன்னிங்ஸில் மகாஜனுக் கல்லூரி துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 98 ஓட்டங்களைப் பெற்றது.

யாழ். இந்து துடுப்பெடுத்தாடியபோது சகல விக்கெட்டுகளையும் இழந்து 225 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கந்தசாமி 72 ஓட்டங்களைப் பெற்ருர்.

2-வது இன்னிங்ஸில் மகாஜனுக் கல்லூரி துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுகளையும் இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சுந்தரம் 33 ஓட்டங்களும், செல்வரத்தினம் 41 ஓட்டங்களும் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டி யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30. 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜி - பானுமதி
நடித்த
**மக்களைப் பெற்ற மகராசி**

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30 6-30, 9-45
போயாதினங்களில் 4 காட்சிகள்
MARVEL MAN
[ஹிந்தி]

**MANOHARA**
JAFFNA
Daily at 4-45, 7-00, 9-45
**BIKINI BEACH**
Panavision - Pathecolour

REGAL - JAFFNA
NOW SHOWING
Tony Russell & Isa Gastoni
in
THE WILD WILD WILD PLANET
(Adults Only)

## டைகேர்ஸ் வென்றது

கோண்டாவில், ஞாயிறு
கோண்டாவில்இளம்இந்து வாலிபர் சங்கத்துக்கும் கோண்டாவில் டைகேர்ஸ் கிளப்புக்கும் சிநேகித பூர்வமாக நடைபெற்றபாட்மிண்டன்விளையாட்டுப் போட்டியில்டைகேர்ஸ்கிளப் 5 ஆட்டங்களில் வெற்றியீட்டியது. இந்துவாலிபர் சங்கத்தினர் 2 ஆட்டங்களில் வெற்றியீட்டினர்.

## வல்வை புளூஸ் வெற்றி

வல்வெட்டித்துறை, ஞாயிறு
யாழ்ப்பாண உதைபந்தாட்டச் சங்கத்தின் கீழ் நடைபெற்ற சுற்றுப்போட்டியில் வல்வை புளூஸ் வதிரி டைமன்சை 4-1 கோல்களால் தோற்கடித்தது. திரு. கிருஷ்ணன் மத்தியஸ்தம் வகித்தார்.

இப்போட்டி யாழ். விளையாட்டரங்கு மைதானத்தில் நடைபெற்றது.

## யாழ்ப்பாணக் கல்லூரிவென்றது

உடுவில், ஞாயிறு
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், சுன்னுகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையே ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி 110 ஓட்டங்களால் ஸ்கந்தவரோதயக் கல்லூரியைத் தோற்கடித்தது.

## காலி அலோஷியஸ் வென்றது

காலி, ஞாயிறு
காலி அலோஷியஸ் கல்லூரிக் கிரிக்கெட் கோஷ்டியினருக்கும், அம்பலாங்கொடை ஸ்ரீ தேவானந்தாக்கல்லூரிக் கோஷ்டியினருக்குமிடையே காலி முற்றவெளி மைதானத்கில் நடைபெற்ற கிரிக்கெட்போட்டியில அலோஷியஸ் கோஷ்டியினர் பத்து விக்கெட்டுகளால் வெற்றியீட்டினர்.

## பாடகர் குழு ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், திங்கள்
யாழ்ப்பாணம் சஞ்சூசையப்பர் நன்மரண ஊர்வலம் பாடகர் குழுவினரின் முதலாம் ஆண்டு நிறைவுவிழா கொழும்புத்துறை சஞ்சூசையப்பர் சாதனு பாடசாலை மண்டபத்தில் வண. வில்லியம் ஜேசுதாசன் சுவாமியார் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் குழுத் தலைவர் மரியாம் பிள்ளையின் சேவையையும் மற்ற அங்கத்தவரின் சேவையையும் வண. பிதா வில்லியம் ஜேசுதாசன் பாராட்டிப் பேசினுர்.

பாடகர் குழுவைச் [illegible]

## மாட்டுவண்டில் சவாரிப்போட்டி

யாழ்ப்பாணம், திங்கள்
நீர்வேலி வாலிபர்சங்கத்தினர் இம்மாதம் 23ம் திகதி ஒரு மாட்டுவண்டில்சவாரிப் போட்டியை நீர்வேலி முற்றவெளி மைதானத்தில் நடாத்தத் தீர்மானித்துள்ளனர். இந்நிகழ்ச்சிகளில்கோப்பாய் எம்.பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை, கோப்பாய்பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. ஆ.இராசையா ஆகியோர் கலந்துகொள்ளவிருக்கின்றனர். திரு. சி. நடேசலிங்கம் இவ்வைபவத்திற்கு தலைமை வகிப்பார்.

## வீட்டுத்தோட்ட போட்டி

கோப்பாய், ஞாயிறு
கோப்பாய் வடக்கு அம்பாள் இளைஞர் விவசாயக் கழகம் இப்பகுதியில் ஒரு வீட்டுத்தோட்டப் போட்டியை நடாத்தி வருகிறது. இப்போட்டியில் கோப்பாய் வடக்கில் வசிக்கும்110குடும்பங்கள் கலந்துகொள்வதாக அறியப்படுகிறது.விவசாயப் பகுதியின் உதவியுடன் இப்போட்டி நடாத்தப்படுகிறது.

## வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

**திங்கள் 20 - 2 - 67**

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-20 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும்பயிர்.

இரவு 6-15பாட்டு, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 விவேகச்சக்கரம், 7-45 தமிழ் மூலம் சிங்களம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம் — பல்கலை மதிப்பீடு. 10-00 நேயர் விருப்பம்.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## வரி விளம்பரம்

### தேவை

மனேச்சர்...
எங்கள் அலுவலகத்திற்கு மனேஜர், காசாளர், லிகிதர் தேவை. சகல விபரங்களுடனும் 25-2-67-க்கு முன் மனுச்செய்யவும். செயலாளர், 308/1, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். 2346

ஆசிரியர்:
தமிழ் மூலம் சிங்களம் கற்பிப்பதற்கு ஆசிரியர், ஆசிரியைகள் உடனே தேவை. விண்ணப்பிக்கவும். ஜெயா வர்த்தகக்கல்லூரி, சந்தை வீதி, உடுப்பிட்டி. 1554

### கல்வி

வகுப்புகள்.
வர்த்தகம், சிங்களம், கலை, விஞ்ஞானம், தையல் வகுப்புகள் நடைபெறுகின்றன. 1-3-67 க்கு முன் விண்ணப்பிக்கவும். ஜெயா வர்த்தகக் கல்லூரி, சந்தை வீதி, உடுப்பிட்டி. 1553

### விற்பனைக்கு

கூவும் சேவல் - கேரும் பேடு - பறக்கும் குஞ்சு — வாங்கிவிட்டீர்களா? விலை நிதானம். அருணு ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 2300

### காணவில்லை

சுவீப்பட்டியல்:
ஜிம்கானு சுவீப் பட்டியல் கைப்பையுடன் யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் நேற்று தவறிவிட்டது. கண்டெடுத்தோர் சிங்கப்பூர் டிஸ்பென்சரியில் கொடுக்கவும். 1555

## மீனவர்களுக்கு நிபந்தனை

யாழ்ப்பாணம், திங்கள்
கடற்ெருழில் இலாகாவிலிருந்து இயந்திரப்படகுகளைப் பெற்ற மீனவர்கள் அனைவரும் தாம்பிடிக்கும் மீன்களை இலங்கை கடற்ெருழில் கூட்டுஸ்தாபனத்துக்கே விற்க வேண்டுமென்ற நிபந்தனையடங்கிய சுற்றறிக்கை ஒன்று சகல மீனவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் விற்க விரும்பும் விலைக்கு மேற்படி கூட்டுஸ்தாபனம் மீன்கள் வாங்குமா என்பன போன்ற விபரங்களை உடனடியாகத் தமக்கு அறியத்தருமாறு, வடமாகாண கடற்ெருழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின்சமாஜம் மேற்படி கூட்டுஸ்தாபனத்திடம் கோரியுள்ளது.
[ந.நி.]

நவா
கொம்பனித்தெரு
**இங்ஸ்லி** கொழும்பு | **பிளாஸா** வெள்ளவத்தை | **வெலிங்டன்** யாழ்ப்பாணம்

3வது வெற்றி வாரம்!

**விஜயா** மட்டக்களப்பு | **ஸ்ரீ கிருஷ்ணு** திருமலை | **விஜிதா** ஹட்டன்

அன்பு பாசத்தால் பிணைக்கப்பட்ட ஒரு டாக்டர்! கால் ஊனம் ஆனதால் தாழ்வு மனப்பான்மை கொண்டு தத்தளிக்கும் அவர் தங்கை!! அருமைக் கணவன்மீது சந்தேகங் கொண்ட அவர் மனைவி!! இவர்கள் மூவரின் கதை-

**எஸ். எஸ். ராஜேந்திரன்**
**விஜயகுமாரி, எஸ். வி. சுப்பையா**
**எல். விஜயலக்ஷ்மி, நாகேஷ், மணிமாலா**
முதலியோர் நடிக்கும்

**காக்கும் கரங்கள்**

கடைசி வாரம்!
கெப்பிட்டல் கொழும்பு | மொடேர்ன் பண்டாரவளை

எம். ஜி. ஆர்., ரத்னு,
கே. ஆர். விஜயா, நம்பியார், நாகேஷ்,
மனேரமா
மற்றும் பலர் நடிக்கும்

**தொழிலாளி**

**நைலன் ஷேட்டுகள்**
உள்ளது கொஞ்சமே!
வழக்கமான விலை 24/- மலிவு விலை 18/-
**பொகுமால்ஸ்**
49, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## நன்றி நவிலல்

செல்வநாதன் — ரங்கநாயகி

5-2-67-இல் நடந்தேறிய எமது திருமணத்திற்கு சமூகம் தந்தும், வாழ்த்துக்கள் தெரிவித்தும் பரிசுகள் வழங்கியும் எம்மை ஆசீர்வதித்த நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேம்.

'நமசிவாயம் இல்லம்'
31?, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘தும்புத் தொழிலில் ஈடுபடுக’

## இராமத்து பெண்களுக்கு எஸ்.ஜே.வி. புத்திமதி

மாவிட்டபுரம், சனி

‘கமத்தொழிலோடு சேர்ந்து கைத்தொழிலும் முன்னேறினுல்தான் நாட்டின் பொருளாவாரம் உயர்ச்சியடையும். தும்புத்தொழிலில் கிராமத்துப் பெண்மணிகள் பங்குபற்றி பொருளாதாரத்தையும் தம் வாழ்வையும் சீர்செய்துகொள்ள

தெல்லிப்பழையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கயிறு திரிக்கும் நிலையத் திறப்பு விழாவிற்குத் தலைமைதாங்கிய காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தமது தலைமையுரையில் மேற்கண்டவாறு கூறினர்,

யாழ்ப்பாணம் ‘லையன்ஸ கிளப்’பினர் தெல்லிப்பளை வாலிபர்களின் ஒத்துழைப்புடன் தெல்விப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் தும்புத்தொழிலை அபிவிருத்தி செய்யும் நோக்கமாகப் புதிதாக கயிறுதிரிக்கும் நிலையமொன்றை ஆரம்பித்துக்கொண்டனர்.

வலி-வடக்குக் காரியாதிகாரி திரு. ரி. முருகேசம் பிள்ளை பேசுகையில், தும்புத் தொழில் மிகவும் நல்லதென்றும் ஆனல் அதற்கு வேண்டிய மூலப்பொருள் தூர இடங்களிலிருந்து எடுக்கவேண்டியிருப்பதால் லையன்ஸ் ஸ்தாத்பனதார் மூலப்பொருள்களைப் பெற்றுக்கொடுப்பதற்கும் உற்பத்திசெய்யப்பட்ட தும்புப் பொருட்களை நல்ல விலைக்கு விற்பதற்கும் கிராம மக்களுக்கு உதவி செய்வதோடு அரசாங்கம் அமுல் நடத்தியிருக்கும் நெசவுத்தொழில் அபிவிருத்தியில் லையன்ஸ் கிளப் ஸ்தாபனத்தார் பங்குபற்றி அவர்களின் ஆதரவில் வலி-வடக்கில் இரண்டு புதிய நெசவுநிலையங்களை அமைத்துத்தர முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்

டாக்டர் சிவசோதி பேசுகையில், லையன்ஸ் கிளப்பின் நோக்கங்களையும் கொள்கைகளையும் விளக்கிப் புதிய நேசவுநிலையங்கள் அமைப்பது பற்றித் தங்கள் சபை கவனமெடுக்குமென்றும் கூறினர்.

# இலங்கை - ரஷ்ய உறவின் 10-வது ஆண்டு தினம்

## சோவியத் தூதர் செய்தி

யாழ்ப்பாணம், ஞாயிறு

சோவியத் யூனியனுக்கும்-இலங்கைக்குமிடையில் ராஜதந்திர உறவு ஸ்தாபிதமான 10-வது ஆண்டு நிறைவு தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது.

இதுசம்பந்தமாக இலங்கையிலுள்ள சோவியத் தூதர் திரு. எல். ஏ. கொரபின் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கின்ருர்.

“சோவியத் யூனியனுக்கும் இலங்கைக்குமிடையில் ராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்டதன் இந்த மகத்தான பத்தாண்டுத் தினத்தின்போது சோவியத்-இலங்கை மக்களுக்கிடையில் நட்புறவும் ஒத்துழைப்பும் எமது இரு நாடுகளினதும் சமாதானத்தினதும் நலன்களின் அடிப்படையில் மேலும் மேலும் பல்கிப் பெருகவும், வளர்ந்து வலுப்படவும் வாழ்த்துகிறேன்.”

## முத்திரை தட்டுப்பாடு

பலாலி, ஞாயிறு

காங்கேசன்துறை தபாற்கந்தோரில் ஏற்பட்டுள்ள முத்திரைத்தட்டுப்பாட்டினுல் பலர் கடிதத்தொடர்பு கொள்ளமுடியாது தபால்களை திருப்பிக் கொண்டு செல்கின்றனர்.

## பட்டம்மாள் வருகிருர்

கொழும்பு, சனி

பிரபல தென்னிந்திய தமிழ் பாடகி ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள் வருகிற மே மாதத்தில் இலங்கை வரவிருக்கிருர்.

புனித ஸ்தலங்களை தரிசிப்பதற்காக வரும் அவர் கோவில் திருப்பணிகளுக்குதவும் வகையில் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இன்னிசை விருந்தளிப்பார் என்றும் தெரிகின்றது. இதற்கான ஏற்பாடுகளை செய்வதில் திருமதி கே. சச்சிதானந்தா ஈடுபட்டிருக்கின்ருர்.

திருமதி பட்டம்மாளுடன் மிருதங்க வித்துவான் பாலக்காடு மணியம் வரவிருக்கின்ருர்.

[5-ம் கலத் தொடர்ச்சி]

சம்பந்தமாக லொறியின் சாரதி சார்ல்ஸ் என அழைக்கப்படும் ஜினதாஸா என்பவர் 1000 ரூபா பிணையில் விடுபட்டுள்ளார், இவரின்மீது குற்றம் சாட்டிப் பொலிஸாரால்தாக்கல்செய்துள்ள வழக்கு திருக்கோண்மலை மாவட்ட நீதிமன்றத்தில் 19'ந் திகதி எடுத்துக் கொள்ளப்பட்டது.

### திமிங்கிலம்

திருக்கோணமலைத் துறைமுகத்திலிருந்து சிறிதுதூரத்தில் சுமார் 40 அடி நீளமுள்ள ஒரு திமிங்கலம் கடலில் சென்றதாகக் கூறப்படுகிறது. முன்னா ஒருதடவை ஒரு திமிங்கலம் காயப்பட்டு இறந்தநிலையில் இத்துறைமுகத்தில் வந்தடைந்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

### துறைமுக கிளைக்கூட்டம

இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கத்தின் திருக்கோணமலைத் துறைமுகக் கிளையின் 9-வதுவருடாந்தப் பொதுக்கூட்டம் திருக்கோணமலை நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. 1966-ம் ஆண்டு ஜூலை மாதம் 4-ந் திகதி நடந்த வருடாந்தப் பொதுக் கூட்டத்தின் அறிக்கை சபையில் வாசிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டது. புது வருட நிர்வாகிகள் வருமாறு:

தலைவர் வி. மரகதலிங்கசிவம், உபதலைவர் ரி. நவநீதன், காரியதரிசி பேட்றம் ஜோன்பிள்ளை, உப காரியதரிசி கே, அம்பலவாணர், தனுதிகாரி எஸ். சுப்பிரமணியம், உபதனுதிகாரி எஸ். கனகராயர்.

### அதிசய ஆட்டுக்குட்டி

திருக்கோணமலையிலிருந்து 8 மைல் தூரத்திலுள்ள வெள்ளைமணல் என்னும் கிராமத்தில் மூன்று கால்களைக்கொண்ட ஓர் அதிசய ஆட்டுக்குட்டிபிறந்திருக்கின்றது. உயிருடனிருக்கும் இந்த அதிசயப் பிறவியைக் காண்பதற்கு ஏராளமானவர்கள் தினமும் செல்கின்றனர்.

---

இப்பத்திரிகை ‘‘ஈழநாடு’’ லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### சிறுபான்மைத் தமிழர் ஆலயப் பிரவேசம்

# சமரசபிரசாரமே பிரச்னைதீர வழி

## அவசியமெனில் இந்திய பெரியார்களை அழைக்கலாம்

### அரசாங்க அதிபர் தெரிவித்துள்ள யோசனை

யாழ்ப்பாணம, ஞாயிறு

‘அனேகமான ஆலயங்கள் தர்மகர்த்தாக்களுக்குச்சொந்தமான காணிகளிலேயே இருப்பதால் அவைகளில் சிறுபான்மைத் தமிழர்கள் பிரவேசத்துக்குப் பலாத்கார முறையைக் கையாள்வதால் வெற்றிகாண்பது சுலபமல்ல. இதற்குச்சட் ம் இடந்தரவில்லை எனவே தொகுதிகள் தோறும் சமரச பிரசாரங்களின்மூலம் இதனைச் சுலபமாகக் சாதிக்கமுடியும்.’ இவ்வாறு யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் கருத்துத்தெரிவிதுள்ளார்

சிறுபான்மைத் தமிழர் பிரச்னை சம்பந்தமாக நேற்று நடைபெற்ற ஒரு மகாநாட்டில் அவர் தமது கருத்தை வெளியிட்டார்.

பிரசார வேலைகளுக்குக் காரியாதிகாரிகள் எம். பி.க்கள், ஆசிரியர்கள் மற்றும் பிரமுகர்களின் ஒத்துழைப்பை நாடலாமென்றும் அவசியமெனில் இந்தியாவிலிருந்தும் சமயப் பெரியார்களை இங்கு வரவழைத்து இந்த விஷயத்தில் உதவிபுரியக் கோராலாமென்றும் அவா யோசனை கூறியுள்ளார். தமது இத்திட்டம் பற்றி ஒரு வாரகாலத்தில் தமக்குத் தங்கள் கருத்தை தெரிவிக்கும்படியும் அரசாங்க அதிபர் சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியைக் கேட்டிருக்கின்ருர்.

சிறுபான்மைத் தமிழர் பிரச்னை சம்பந்தமாக நேற்று மாலை யாழ்ப்பாணம் அரசாங்கச் செயலகத்தில் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் நடைபெற்ற விசேஷ கூட்டத்தில் இப்பிரச்னையைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கான யோசனைகளை சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி பிரதிநிதிகளுக்கு திரு. வேர்ணன் அபயசேகரா கூறினர்.

அரசாங்க அதிபரின் அழைப்பின் பேரில் சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியின் சார்பில் முன்னுள் செனட்டர் திரு. ஜி. நல்லையா, திரு. எம். சி, சுப்பிரமணியம் உட்பட ஆறு பிரமுகர்கள் கூட்டத்தில் கலத்துகொண்டனர்.

யாழ்ப்பாண அரசாங்க அதிபருடன் யாழ். மாவட்ட தலைமைக் காரியாதிகாரி திரு. ஒ. கந்தையாவும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார்.

சுமார் மூன்று மணிநேரமாக அரசாங்க அதிபரின் அலுவலக அறையில் நடைபெற்ற இக்கூட்டத்துக்குப் பத்திரிகை நிருபர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

சிறுபான்மைத் தமிழர் ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக அவர்களுக்கு அளிக்கப் பட்டிருந்த 3 மாத அவகாசம் நேற்றுடன் முடிவுற்றதாலேயே இவ் விசேஷ மகாநாடு கூட்டப்பட்டது. கடந்த மூன்று மாத காலங்களிலும் சிறுபான்மைத் தமிழரின் ஆலயப் பிரவேசம் சமூகக் குறைபாடுகள் பற்றி அரசாங்க அதிபர் கோவில் தர்மகர்த்தாக்கள், கோவில் குருக்கள்மார் சமயப் பெரியார்கள் ஆகியோருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் முடிவுகள் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டன.

[illegible] சிறுபான்மைத்தமிழர் தமது கருமங்களைச் செய்து கொள்ள சட்டம் இடம் கொடுப்பதாகவும். இந்த தொழில் ஸ்தாபனங்களில் சிறுபான்மைத்தமிழர் தமது கருமங்களைச் செய்துகொள்ளலாமெனவும் இதற்கு சலூன், லோண்டரி சொந்தக்காரர்கள் ஆட்சேபம் தெரிவித்தால் சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கலாமெனவும் திரு.வேர்ணன் அபயசேகரா எடுத்துக்கூறினர்.

ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக சட்டபூர்வமான நடவடிக்கையை மேற்கொள்ள சட்டம் இடம் கொடுக்கவில்லையென அவர் தெரிவித்தார். நூற்றுக்கு நூறு வீதம் கோவில் முகாமையாளர்களினதும் கோவில் குருக்கள்மாரினதும் இந்துசமய பிரமுகர்களினதும் சம்மதமின்றி சுமுகமான முறையில் ஆலயப் பிரவேசம் செய்துவிடமுடியாது என்றும் திரு. அபயசேகரா சுட்டிக்காட்டினர்.

கடந்த மூன்றுமாத காலங்களில் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகளில் சிலகிராமப்புறங்களில் 70 வீதம் சிறுபான்மைத்தமிழர் ஆலயப் பிரவேசத்துக்கு கோவில் குருக்கள்மார்களும் கோவில் தர்மகர்த்தாக்களும் சாதகமாக இருப்பதை தாம் அறிந்து கொண்டதாகவும் ஆனல் வேறு சில இடங்களில் இவ்விஷயத்தில் 30 வீதம் கூட சாதகமாக இல்லாதிருப்பதை தாம் தெரிந்து கொண்டதாகவும் திரு. அபயசேகர தெரிவித்தார்.

அநேகமான ஆலயங்கள் கோவில் தர்மகர்த்தாக்களுக்குச் சொந்தமான காணியில் இருப்பதால் இதில் பலாத்காரமுறையை அனுசரிப்பதில் வெற்றிகாண்பது அவ்வளவு சுலபமல்ல என்றும் இதற்குச் சட்டம் இடம்கொடுக்காது எனவும் அவர் தெளிவுபடுத்தினர். இவைகளைச் சுலபமான முறையில் கையாண்டு நடைமுறைக்கு கொண்டுவர தொகுதிகள் தோறும் பிரச்சாரம் நடத்துவதே சிறந்த வழி எனத்தெரிவித்த அவர் இதில் காரியாதிகாரிகள், எம்.பி.க்கள்.பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பிரமுகர்களின் ஒத்துழைப்பை நாடுவதெனவும் குறிபிட்டார். இப்பிரச்சாரம் வலுப்பெறுவதற்கு இந்தியாவிலிருந்து பல சமயப் பெரியார்களை இங்குஅழைத்துப்பிரச்சாரக் கூட்டத்தை நடத்த தாம் எண்ணியிருப்பதாகவும் இப்பிரச்சாரங்களே கிறுபான்மைத் தமிழரின் ஆலயப் பிரவேசதுக்கு வழி வகுக்குமெனவும் எடுத்துக் கூறிய திரு. அபயசேகரா இதுபற்றிய முடிவை சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியினர் தமக்கு ஒரு வாரத்துக்குள் தெரிவிக்க வேண்டுமெனவும் பேச்சுவார்த்தையின் இறுதியில் கேட்டுக்கொண்டனர்.

[ந. நி.]

### திருக்கோணமலைக் கடிதம

# கூட்டுறவு மாணவர்களின் பிரியாவிடை வைபவம்

—நமது நிருபர்—

திருக்கோணமலைக் கூட்டுறவுக் கல்வி நிலையத்திலிருந்து நான்குமாதக் கூட்டுறவுப்பயிற்சி பெற்றுமாணவர்கள் வெளியேறும் பிரியாவிடை வைபவம், கலாசாலையிலுள்ள 12-ம்குழுவினரது ஆதரவில் திருக்கோணமலை இந்துகல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இவ்வைபவத்துக்கு மாணவ தலைவன் திரு. பி. ஜெயரத்தினம் தலைமைவகித்தார். அவர் தமது தலைமையுரையில் இம்மாவட்டசமாஜம் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு சிரேஷ்ட வகுப்புகளை நடாத்துவதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்துகொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

கூட்டுறவுக் கல்வி நிலையத்தின்அதிபர் தமது உரையில் கூட்டுறவுப் பயிற்சி பெற்று வெளியேறும் மாணவர்கள் தாங்கள் கடமையாற்றும் ஒவ்வொரு கிராமத்திலும் கிராமிய மக்களிடையே கூட்டுறவை வளர்க்க முயற்சிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

மாவட்ட சமாஜத்தின் தனுதிகாரி திரு. இ. சொக்கலிங்கம் பேசுகையில் கூட்டுறவுப் பயிற்சிபெற்று வெளியேறும் மாணவர்கள் தங்கள் கடமைகளை நேர்மையுடன் செய்வதுடன் அதிகாரத்திலிருக்கும் நிர்வாக சபைக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்ட்ார்.

திருக்கோணமலைப் பரிபாலனசபைக் காரியதரிசி திரு. கே, ஜெயரத்தினம் தமது உரையில் பள்ளிக்கூட மாணவர்களுக்குக் கூட்டுறவு ஒரு பாடமாகப் போதிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

### லொறி விபத்து

உப்புவெளி மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த மாணவன் சிவராசா பாலசுப்பிரமணியம் சென்றவாரம் ஒரு லொறிவிபத்தில் சிக்கி ஸ்தலத்திலேயே மரணமானது

(2-ம் கலம் பார்க்க]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org